REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55690

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 5உ திங்கள் (21—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 6உ செவ்வாய் (22—11—55) [இதழ் 136

10,000 ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்?

திருவனந்தபுரம் நவ. 20—

திரு-கொச்சியைச் சேர்ந்த சமார் 10,000-த்திற்கும் மேற்பட்ட தனிப்பட்ட செகண்டரி பள்ளி ஆசிரியர்கள், வருகிற டிசம்பர் திங்கள் 12-ந் தேதி முதல் காலவரையறையின்றி அடையாள வேலை நிறுத்தம் செய்யப்போவதாக 'பயமுறுத்தியுள்ளனர்' என்று பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

தங்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ள 'நேரடி நடவடிக்கை'யில் ஈடுபடப்போவதாக இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

திராவிட மாணவர் மாநில மாநாடு

'பொறுப்பிலிருந்து விலகுகிறேன்'

தோழர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

'கட்டுக்கோப்பும், கவர்ச்சியும், வலிவும் பொலிவுமுள்ள அமைப்பாக மாணவர் கழகம் மலரட்டும்'

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கழகத்துடன் தொடர்பு கொண்டேன்; அண்ணா அவர்கள் ஏற்றிவைத்த விடுதலை தீபம் ஆயிரக்கணக்கான மாணவர்களை தன்பால் ஈர்த்ததுபோல் என்னையும் ஈர்த்தது; ஆனால், இந்த பத்து ஆண்டுகளில் நமது மாணவர் இயக்கம் நம்மவர் மன மகிழ்ச்சி அடையும் வண்ணமும், மாற்றார் மருட்சி கொள்ளும் வகையிலும் வளர்ந்துள்ளது. இந்நிலை பெறுவதற்கு நாம் பட்ட சிரமமும், சித்திரவதையும், இன்னலும், இடுக்கண்ணும் சாமானியமானதல்ல; எந்த விடுதலை இயக்கமும் தந்து தீரவேண்டிய விலையைக் கொடுத்திருக்கிறோம்.

"என்னைப் பற்றி பாராட்டுரை வழங்கிய நண்பர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நான் இந்த காரியங்களுக்கு பொறுப்பேற்று பணிபுரிந்தக்காலை, நான், பல்கலைக் கழகத்திலேயிருந்து விலக்கப்பட்டதையும், என்மீது வழக்குகள் தொடரப்பட்டதையும், எனது மண்டை உடைக்கப்பட்டு, இரத்தம் வழிந்ததையும், பல்கலைக் கழகத்திற்கு 5 மைல் சுற்றளவில் நான் நுழையக் கூடாது என்று தடை போடப்பட்டது என்பது குறித்தும் எடுத்துரைத்தார்கள்; விடுதலை இயக்கம் என்ற ஏட்டில் இவைகளெல்லாம் சாதாரண அத்தியாயங்கள்; இதில் பிரமாதம் ஒன்றும் இருப்பதாக நான் கருதவில்லை; இவை இல்லாமல் இருந்திருந்தால்தான் ஆச்சரியமெல்லாம். இப்படிப்பட்ட சம்பவங்களில் நான் பங்கு பெறுவதற்கு, இயக்கம் எனக்கு ஒரு வாய்ப்பு அளித்ததே என்பதுதான் நான் அடையும் பூரிப்பு.

"நாம் ஏற்றுக்கொள்கிற சாதாரண சிரமங்களுக்குக்கூட விரைவில் பலன் கிடைக்கிறது என்பதை சில சம்பவங்கள் எனக்கு உணர்த்தின; அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் என் மீதும்—நம்முடைய நண்பர்கள் மீது ஒரு வழக்கும், காங்கிரஸ் நண்பர்கள் மீது ஒரு வழக்கும் போடப்பட்டது; காங்கிரஸ் நண்பர்கள் மீதுள்ள வழக்கை அமைச்சர் குழு வாபஸ் பெற்றது; அப்போது கல்வி அமைச்சராயிருந்த அவினாசிலிங்கம்(செட்டியார்) அவர்களைச் சந்தித்து, 'இந்த வழக்கை வாபஸ் பெறுக' என வற்புறுத்தினேன்; அதற்கு அவினாசிலிங்கம் சொன்னார்:—'கும்பகோணத்தில் மகாமகக் குளத்திற்கு அருகிலேயுள்ள கோவிலில் யாரோ சில மாணவர்கள் தவறாக நடந்துகொண்டனராம்; ஆகவே, வழக்கு நடைபெறும்'—என்று! நான் இருந்தது தில்லைக்ஷேத்திரம்; அவர் சொன்னதோ கும்பகோணத்தைப் பற்றி; ஒரு பேருண்மையை நான் புரிந்துகொண்டேன்—'இந்த வழக்கு தனிப்பட்ட என்மீதல்ல; நாம் கொண்டிருந்த கொள்கையின் மீது'—என்று; அந்தத் தெளிவுதான் எனக்குத் தெம்பைக் கொடுத்தது.

"நாம் ஒன்றும் தோற்றுவிடவில்லை. கடலூரில் எந்த வழக்கு மன்றத்தின் முன்பு நான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருந்தேனோ, அதே வழக்கு மன்ற நீதிபதியின் குமாரர்—அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர் செயலாளர் என்னை வரவேற்றதை, இரண்டு வருடங்களுக்கு முன்பு சிதம்பரம் சென்றபோது கண்டேன்.

"இன்றையதினம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஆயிரக் கணக்கான ஆற்றலர்களைப் பெற்றிருக்கிறது. கடந்த பல வருடங்கள் அந்த பொறுப்பினை ஏன் ஏற்றிருந்தேன்? நானே பொதுச்செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றுவது உங்களுக்கும் சிறப்பல்ல—எனக்கும் சிறப்பல்ல; எனவே, இந்தப் பொறுப்புகளை முன்னின்று நடத்த நீங்கள் முன்வர வேண்டும். சென்ற ஆண்டில் இதே கோகலே மண்டபத்தில் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்—'ஒரு நெடுஞ்செழியன் வந்தார்; ஒரு மதியழகன் வந்தார்; மற்ற நெடுஞ்செழியன்கள் எங்கே? மதியழகன்கள் எங்கே?'—என்று! இதை உங்களுக்கு விடுத்த அறைகூவலாக மட்டும் கருதவில்லை—எனக்கும் விடுத்த அறைகூவலாகவே நான் கருதுகிறேன். எனவே, அதனை ஏற்றுக்கொண்டு பதிலிறுக்கத் தயாராக வேண்டுகிறேன்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

அமைப்புக் குழு

a. திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், கட்டுக்கோப்பும்-கவர்ச்சியும், வலிவும்-பொலிவும் பெற்ற ஓர் மத்திய அமைப்பாக உருவாவதற்கு வேண்டிய பணியினைச் செய்து முடிக்கக் கீழ்க்கண்டவர் அடங்கிய குழுவினரை இம்மாநாடு நியமிக்கிறது:—

டி. கே. பொன்னுவேலு —அமைப்பாளர்
உ. பில்லப்பன், சு. ஆறுமுகம் —பச்சையப்பன் கல்லூரி
மா. பாண்டியன் —மதுரை
தீ. வீரன் —காஞ்சி
செழியன், சி. டி. தண்டபாணி —கோவை
வி. சிவப்பிரகாசம் —சேலம்
மாறன் —தஞ்சை
தில்லை-வில்லாளன், கு. வளவன் —அண்ணாமலைநகர்
வி. கிருஷ்ணமூர்த்தி —பெங்களூர்
நாகராசன் —புதுக்கோட்டை

b. மேற்கொண்டும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அமைப்புக் குழுவிற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணாதுரை விளக்கம்

இன்றுவரை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய தோழர் மதியழகன் அவர்கள் இந்தப் பொறுப்பைத் துறந்துவிடுவதாகக் கூறினார்; கூர்ந்து கவனித்தால் தெரிந்திருக்கும்—'அப்படிச் செய்யத் தூண்டியவன் நான் தான்' என்று கூறினர். நண்பர் மதியழகன் எனக்கு நிரம்பத் தேவைப்படுகிறார். அவரை, இன்னமும் மாணவர் கழகத்தில் அனுமதிக்க நான்தயாராக இல்லை. இதனைவிட விரிந்த—பரந்த—ஆனால், எந்த விதத்திலும் குறைந்திராத துறையில் பணியாற்ற அவரை உங்களிடமிருந்து எடுத்துச் செல்கிறேன். அவருக்கு வேறு வேலைகள் இருக்கின்றன.

"உழவு முறை அறிந்தவர்கள் சில உண்மைகளை உணருவார்கள். பயிர் செய்வதற்கு முன்பு நாற்று நடுகிறோம்; அந்த நாற்று நன்றாக வளர்ந்தபின், அதனைப் பிடுங்கி எடுத்து நல்ல நிலத்தில் நடவேண்டும். அப்படிப் பிடுங்கி எடுத்து நட்டால்தான் நாற்றும் நல்ல பயிராகி, நல்ல நெல்மணிகளைக் கொடுக்கும்; அதனை நட்டவருக்கும் நல்ல பயன் தரும்படி நல்க முடியும். அதுபோலத்தான் நண்பர் மதியழகனும் நல்ல வளர்ந்துவிட்ட நாற்று; நெடுநாளாகவே நாற்றாக இருக்கிறார். அதனை எடுத்து வேறோர் இடத்தில் நட்டு, நல்ல நெல்மணிகள் காய்க்கச் செய்து, அதன் பயனை நாட்டவர் அடைவதற்கு வகை செய்யவேண்டும் என்று கருதுகிறேன். இது பலன் கொடுக்காத நாற்றாக இருந்தால், 'இருந்த இடத்திலேயே இருக்கட்டும்; இதனால் பலனில்லை,' என்று விட்டுவிட்டிருப்பேன். இது அப்படிப்பட்ட நாற்றல்ல; நண்பர் மதியழகன் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை திறம்பட கட்டிக் காத்து, வளர்த்துள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் பெற்றுள்ள அநுபவத்தை முன்மாதிரியாகக் கொண்டு, மற்ற மாணவர்கள் திறமையுடன் இந்த அமைப்பை, வலிவும்—பொலிவும் உள்ளதாக ஆக்குவதற்குப் பணியாற்ற வேண்டும்.

"கடந்த வருடங்களில் நண்பர் மதியழகன் தனது முழுநேரத்தையும் மாணவர் கழகத்திற்கே பயன்படுத்த முடியவில்லை; காரணம், இரண்டு மூன்று வருடங்களாக அவரை 'அறிவக'த்திலே அமர்த்தி, பொறுப்பாளராகவும், தி. மு. க. துணைச் செயலாளராகவும் கசக்கிப் பிழிந்திருக்கிறேன்; நாடு முழுதும் சுற்றி, திராவிட முன்னேற்றக் கழக பிரச்சார காரியங்களில் தீவிரமாகப் பணியாற்றியுள்ளார். எனவே, அவர் விட்டுச் செல்கிற பணியை தொடர்ந்து நடத்திச் செல்ல, இங்கு செல்வாக்கு கொண்ட சக்தி பொருந்திய 12 பேர் கொண்ட அமைப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு, ஆறு மாதமோ, ஒரு வருடமோ நல்ல முறையில் பணியாற்றினால், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக் காக்க முடியும்,"

—என்று, சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டில் சிறப்புரை ஆற்றுகையில் தோழர் சி. என். அண்ணாதுரை குறிப்பிட்டார்.

வறுமைச் சுமையில் பெருங்குடி மக்கள்! வாழ்க்கையைச் சுவைப்பதில் அமைச்சர்கள்!

குற்றாலத்திலும், நீலமலையிலும் சட்ட சபைக் கூட்டமாம்!

சென்னை அரசாங்கம் சிந்தித்துக்கொண்டிருக்கிறதாம்

விபரீதம்! விசித்திரம்! வேதனை!

தென்காசி, நவ. 19—

சென்னை சட்டசபைக் கூட்டங்களுள் சிலவற்றை குற்றாலத்திலும், சிலவற்றை உதகமண்டலத்திலும் நடத்தலாம் என்று சென்னை சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக அமைச்சர் எஸ் எஸ். இராமசாமி கூறியிருக்கிறார்.

"வருகிற ஏப்ரல் திங்கள் முதல் ஜூன் திங்கள் முடியவுள்ள காலத்தில் நடைபெறும் கூட்டங்களை உதகையிலும், ஜூலையிலிருந்து செப்டம்பர் திங்கள் முடியவுள்ள நாட்களில் நடைபெறும் கூட்டங்களைக் குற்றாலத்திலும் நடத்தலாம் என்று உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

இங்கு நடைபெற்ற சமுதாய நிலையத் திறப்பு விழாவில் மேற்கண்ட தகவலைத் தந்த அமைச்சர், மேலும், குற்றாலம் உட்பட சென்னை மாநிலத்திலுள்ள காடுகளை அபிவிருத்தி செய்யவும் மைசூரிலிருந்து ஒரு நிபுணர் வரவழைக்கப்பட இருக்கிறார் என்ற தகவலையும் தந்திருக்கிறார்.

நால்வர் குழு முடிவு: பெங்களூரில்பரபரப்பு?

பெங்களூர், நவ. 20—

மாநிலக் குழுவின் சிபாரிசின்படி மைசூர் உள்ளிட்ட கர்நாடக மாநிலம் ஏற்படுத்த வேண்டுமென்பதை, காங்கிரஸ் காரியக் கமிட்டியால் நியமிக்கப்பட்ட நால்வர் குழு ஒப்புக்கொண்டுவிட்டதாம்; இந்த முடிவு இங்குள்ள காங்கிரஸ்காரர்களிடை மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளதாம்.

ஸ்ரீநகர், நவ. 20—

'மாநிலத்தின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டார்' என்பதற்காகக் காஷ்மீர் வாக்கெடுப்பு முன்னணித் தலைவரும், ஷேக் அப்துல்லா அமைச்சரவையில் மந்திரியாக இருந்தவருமான மிர்சா அப்துல் பெய்க் என்பவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 21—11—'55 திங்கள்

வெண்ணெய் திரளும்போது......!

★

மலேயாவில் முதன் முதலாக நடைபெற்ற சட்டசபை தேர்தலில் மிகப் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி மந்திரி சபை அமைத்த மலேயா முக்கூட்டுக் கட்சித் தலைவரும், முதன் மந்திரியுமான தெங்கு அப்துல் ரஹ்மான், மலேயாவிற்கு சீக்கிரமே முழுச் சுதந்திரம் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தினால்—'சுதந்திரம் தருவதற்கு இயலாது' என்று வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் கூறுவதற்கான காரணங்களுள் ஒன்றான 'நெருக்கடி நிலை' அகற்றப்படவேண்டும்; 'நெருக்கடி நிலைப் பிரகடனத்தைத் திரும்பப் பெறவேண்டும்; நாட்டில் முழு அமைதி நிலவவேண்டும்; அதற்குப் 'பயங்கரவாதிகள்' என்று பட்டம் சூட்டப்பட்டிருப்போர் காடுகளிலும், மலைப்புடவாரங்களிலும் ஒளிந்து நின்று நடத்திக்கொண்டிருக்கிற தாக்குதல்களைக் கைவிட்டுவிட்டு நாடு திரும்ப வேண்டும்; நாடு திரும்பும் அவர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது; அவர்களுக்கெல்லாம், கடந்த காலத்தில் அவர்கள் புரிந்ததாகக் கூறப்படும் குற்றங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்—என்று கடந்த செப்டம்பர் திங்களில் அறிவித்திருந்தார்—பதவி ஏற்றதும், முதல் வேலையாக!

ஆனால், கடந்த இரண்டரை திங்கள் காலத்தில் 'பயங்கரவாதிகள்' என்று வர்ணிக்கப்படும் தீவிரவாதிகளான கம்யூனிஸ்டுகளில் 30 பேர் மட்டுமே, தெங்கு அப்துல் ரஹ்மானின் அறிவிப்பை ஏற்றுக்கொண்டு 'மன்னிப்புப்' பெற்றுக்கொண்டிருக்கின்றனர். சர்க்கார் தரும் கணக்குப்படி மூவாயிரம் பேரில் முப்பது பேர் மட்டுமே புதிய தேசிய சர்க்காரின் வேண்டுதலுக்கு செவிசாய்த்திருப்பது மலேயா மக்களுக்கு மிகுந்த கவலையைத் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்னர் வானொலியில் பேசிய முதன் மந்திரி—'மன்னிப்பு' வழங்குவதை கால வரையறையின்றி நீடித்துக் கொண்டேயிருப்பது சாத்தியமானதல்ல; நிரந்தரமாக மன்னிப்பு வழங்கும் நிலையைத் தொடர இயலாது—என்று, சற்று கண்டிப்பான குரலில் பேசியிருப்பது, மலேயா மக்களின் கவலை உணர்வுக்குத் [illegible] வகையாகும்.

இதற்கிடையில், மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் பிரசாரப் பிரிவுத் தலைவரான சான்-தியன் என்பார், 'ரஹ்மான் அளிப்பதாகக் கூறும் 'மன்னிப்பு' சாத்தியமானதல்ல; நியாய விரோதமானது; ஏற்றுக்கொள்ள இயலாதது,' என்று, முதன் மந்திரிக்குக் கடிதம் எழுதியிருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது.

தெங்கு அப்துல் ரஹ்மான்; [illegible] கம்யூனிஸ்டுத் தூதுவர் ஒருவரைச் சந்தித்த போது, கம்யூனிஸ்டுத் தலைவரான சின்-பெங் என்பாரைச் சந்திக்கவும் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கு இப்போது பதில் தரப்பட்டிருக்கும் முறை, ரஹ்மானுக்கு வியப்பளிப்பதாயிருக்கிறது.

சான்-தியன் என்ற அந்த கம்யூனிஸ்டு பிரசாரப் பிரிவுத் தலைவர், காட்டில் மறைந்து கொண்டிருந்த இடத்தைவிட்டு நாட்டிற்கு வந்து, சுமார் [illegible] கிராம மக்களின் முன்னிலையில், தனது பதில் கடிதத்தைப் பதிவு அஞ்சலில் முதன் மந்திரிக்கு அனுப்பிவிட்டு, போலீஸ் நிலையத்திற்கு வெகு அருகாமையிலேயே பத்திரிகையாளரைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

பத்திரிகையாளரைச் சந்தித்த அவர், தாங்கள் ரஹ்மான் சர்க்காரின் 'மன்னிப்பை' ஏன் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்ற காரணத்தை வெளியுலகு அறிய தெளிவாக்கியிருந்திருக்கலாம்; அப்படிச் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

'பொது மன்னிப்பு' வழங்கப்படும் என்றாலும், நாடு திரும்புவர்களில் எவரும் கைது செய்யப்படமாட்டார்கள் என்றாலும், சிலர் நாடு கடத்தப்படலாம்—இதரர், 'மலேயா வாழ்க்கை முறை'யை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தப்படலாம் என்பது, கம்யூனிஸ்டுகளின் நிராகரிப்பிற்குக் காரணமாயிருக்குமானால், ரஹ்மான் சர்க்கார், அது குறித்து மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுவது அவசியமாகும் என்று நாம் கருதுகிறோம்.

ஏனெனில், 'இரண்டாண்டுகளில் மலேயாவிற்கு சுயாட்சி—நான்காண்டுகளில் முழுச் சுதந்திரம்' என்று குறிக்கோளைத் தெரிவிக்கிற ரஹ்மான் சர்க்காருக்குத்தான் மலேயா மக்களின் விடுதலையில் அதிகமான பொறுப்பு இருக்கிறது.

மலேயா கம்யூனிஸ்டு தீவிரவாதிகள், மலேயாவின் சுதந்திரத்திற்காகத்தான் தாங்கள் போராடி வருவதாகக் கூறுவது உண்மையானால், வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்ததற்கு, தாங்கள்தான் காரணம் என்று பிறர் பழிக்காமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

ஏனெனில், ரஹ்மான் சர்க்கார் நெருக்கடி நிலைப் பிரகடனத்தைத் திரும்பப் பெற்று, நாட்டில் அமைதி ஏற்படச் செய்வதில் வெற்றி பெறாமல் போய் விடுவார்களேயானால், அதைத் தொடர்ந்து மலேயாவில் [illegible] ரஹ்மான் சர்க்காரின் தோல்வியைக் காரணமாகக் காட்டி, இப்போது முப்பதாயிரமாக உள்ள பிரிட்டிஷ் துருப்புகளின் எண்ணிக்கையை மேலும் அதிகமாக்கி, 'மனித வேட்டை'யை நீடிக்கும் என்பதை இருசாராரும் மனதில் கொள்ள வேண்டும்.

சர்க்கார் இலாகா பிற்போக்குத்தனம்

டாக்டர் பி. வரதராசுலு கண்டனம்

19—11—55 அன்று வேலூர், வி. இலட்சுமணசாமி முதலியார் நகர மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில எய்டட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள் இரண்டாவது மாநாட்டிற்குத் தலைமை வகித்த டாக்டர் பி. வரதராசுலு அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்:—

"உங்களுடைய உள்ளங்களிலே பற்பல நெருக்கடியான பிரச்சினைகள் அலைமோதிக் கொண்டிருக்கின்றன; சென்ற ஆறு மாத கால மாக நஷ்டஈடு வரவில்லையே என்கிற வருத்தம் ஓர்புறம்; நியாயமான அளவு நஷ்ட ஈட்டிற்கு ஏற்பாடு செய்யாமல் மிகக் குறைந்த அளவு நஷ்ட ஈடுதான் தரமுடியும் என்று கல்வி இலாகாவின் செப்டம்பர் மாத உத்தரவு ஒன்று தெரிவிக்கிறதே என்கிற வேதனை ஓர்புறம்; 'இந்த அளவு நஷ்ட ஈடு கூடத் தேவையில்லை' என்று அழகப்பா குழுவின் அறிக்கை அறிவிக்கிறதே என்கிற கோபம் மற்றோர் புறம்; எயிடெட் நிர்வாகிகள், இந்த நாட்டில், எல்லாராலும் பாராட்டப்படக்கூடிய அளவில் மிகச் சிறந்த பணியாற்றியிருந்தும் கூட, அந்தச் சிறப்பைப் பாராட்டி அழகப்பா கமிட்டியினர் சில வார்த்தைகள் கூடக் கூறவில்லையே என்கிற துயரம் வேறோர்புறம்; இவ்வாறான பற்பல எண்ணப் புயல்கள் உங்களுடைய நெஞ்சமெனும் வானத்தில் வீசிக்கொண்டிருக்கின்றன. உங்களுடைய பிரச்சினைகளை — அந்தப் பிரச்சினைகளில் உள்ள நியாயத்தை—அந்த நியாயத்தை ஒப்புக்கொண்டு தீர வேண்டிய அவசியத்தை அரசாங்கத்திற்கு விளக்கமாக எடுத்துச் சொல்கிற கடமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். உங்களுக்காக நான் என்னாலியன்ற எல்லா வகை உதவிகளையும் புரிய எப்போதும் தயாராக இருக்கிறேன். கல்விப் பொருளை அள்ளி வழங்கும் அரிய பணியில் ஈடுபட்டுள்ள உங்களுடைய துயரங்களைப் போக்குவது, கல்வி உலகத்தின் துயரங்களையே போக்குவதாகும் என்பது என்னுடைய கருத்து.

ஆறுமாத காலமாக நஷ்டஈடு அளிக்கப்படாமலிருந்தால், எயிடட் நிர்வாகிகள், தங்களுடைய பள்ளிக்கூடங்களை எப்படித்தான் நடத்திச் செல்லமுடியும்? மாதா மாதம் செய்து தீரவேண்டிய செலவுகளை அவர்கள் எப்படிச் செய்துவர முடியும்? இலவசக் கல்வி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மே மாதத்தில்—இப்போது நடப்பதோ நவம்பர் மாதம்; இடையே சென்று மறைந்தது ஆறு மாதங்கள். நஷ்டஈட்டை அளிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யாமல் கல்வி இலாகா ஏன் இவ்வளவு காலமாக உறங்கிக் கிடக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

நஷ்டஈடு இன்னமும் வரவில்லை என்பது மட்டுமல்ல; மிகக் குறைந்த ஒரு விகிதத்தைக் காட்டி, இந்த விகிதத்தின்படிதான் இனி நஷ்டஈடு அளிக்கப்படும் என்பதாக இந்தக் கல்வி இலாகா, செப்டம்பர் மாதத்தில் ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. கல்வி இலாகா குறிப்பிட்டுள்ள இந்த விகிதங்கள் மிக மிகக் குறைவு என்பதே என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து. எயிடெட் பள்ளிகள் சிறப்பான முறையில் நடைபெற வேண்டுமானால் நியாயமான அளவு நஷ்டஈட்டை அவர்களுக்குத் தந்தேயாகவேண்டும்.

அண்மையில் வெளி வந்துள்ள அழகப்பா குழுவின் அறிக்கை, இந்தத் துறையில் மிகவும் தவறான ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் அரசாங்கம் ஓராண்டுக் கால நோட்டீஸ் கொடுத்துவிட வேண்டுமென்றும், அதன் பிறகு எந்த ஆரம்பப் பள்ளியும் எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கக்கூடாதென்றும், அதுபோலவே, எந்த ஆரம்பப் பள்ளியும் அரசாங்கத்திடமிருந்து நஷ்டஈடு கேட்கக்கூடாதென்றும் அழகப்பா கமிட்டி தெரிவித்திருக்கிறது.

இந்த யோசனை முற்றிலும் தவறானது மட்டுமல்ல—நடைமுறைக்குக் கொண்டுவர இயலாததும் ஆகும். சம்பளமும் வாங்கக்கூடாது —நஷ்டஈடும் கேட்கக்கூடாது என்றால், நகரப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களை, அதன் நிர்வாகிகள் எப்படி நடத்த முடியும்? கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வாடகை முதலிய செலவுகள் மிகக் குறைவாக இருப்பதால், அவற்றின் நிர்வாகிகள், அரசாங்கம் அளித்து வருகிற நிர்வாகக் கிராண்டை மட்டுமே வைத்துக்கொண்டு, நஷ்டஈடு இல்லாமலே, தங்கள் பள்ளிகளை நடத்த முடியும். ஆனால் நகரப் பகுதிகளில் மிக அதிகமான வாடகை தரவேண்டியிருப்பதாலும், வேலைக்காரிகள்—ஆயாக்கள்—தோட்டிகள் முதலியவர்கட்குக் கணிசமான சம்பளம் தரவேண்டியிருப்பதாலும், நஷ்ட ஈடு இல்லாமல் பள்ளிகளை நடத்துவது இயலாத செயலேயாகும்.

ஆரம்பப் பள்ளிகளில் மதக் கல்விக்கு இடம் இருத்தலாகாது என்று அழகப்பா குழுவினர் அறிவித்திருக்கின்றனர். இதனை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். குறைந்தது 18 வயதாவது நிரம்பாத மாணவர்களுக்கு மதக் கல்வியை அளிப்பது சிறிதும் முறையல்ல என்பது பல கல்வி நிபுணர்களின் முடிவு. பல்வேறு மதங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள். எந்த ஒரு மதத்தைப் பற்றிய கல்வியைப் புகட்டினாலும் ஏனைய மதத்தவர்களின் உள்ளம் புண்படும். எந்த மதத்தையும் சேராத மதக் கல்வி என்பதாக ஒன்று இருப்பது இயலாது. 'எல்லா மதங்களிலும் பொதுவாக இருக்கிற நன்னெறிகளை—ஒழுக்கமுறைகளை மட்டும் போதித்தாலென்ன?' என்று சிலர் கேட்கின்றனர்; அப்படிப்பட்ட நன்னெறிகளை போதிக்கத்தான் வேண்டும்; ஆனால், அத்தகு நன்னெறிகளைப் பயிற்றுவிக்கும் கல்விக்கு, 'ஒழுக்கக் கல்வி' என்கிற பெயர்தான் பொருந்துமே தவிர, 'மதக் கல்வி' என்கிற பெயர் எப்படிப் பொருந்தும்? பொய்யுரை புகலாதே—பிறர்மீது புறங்கூறாதே—எல்லோரையும் நேசி—அனைவரும் ஒரே குலம்—ஏழைகளுக்கு உதவு—எளியவர்க்குத்தீங்கு இழைக்காதே—எவரிடமும் பகை கொள்ளாதே என்பன போன்ற ஒழுக்க நெறிகளைப் புகட்டும் பயிற்சிக்கு ஒழுக்கக் கல்வி என்கிற பெயர்தானே பொருத்தம்?

6, 7, 8 ஆகிய வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டுமென்று அழகப்பா குழுவினர் தெரிவித்துள்ளனர். இதுவும் வரவேற்கத்தக்க ஓர் சிபாரிசேயாகும். இன்றையதினம் ஆங்கிலமே உலகப் பொதுமொழியாக இருந்து வருகிறது. உலகத்தின் எந்தப் பகுதியோடும் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலப் பயிற்சியே போதுமானதாக இருக்கிறது. விஞ்ஞானத் துறை பற்றிய புத்தகங்கள் ஆங்கிலத்திலேயே ஏராளமாக இருக்கின்றன வாழ்க்கையை வளமும், வசீகரமும் உள்ளதாக மாற்றக்கூடிய மருத்துவம், பொறி இயல், மின்சாரம், அணு சக்தி முதலிய எண்ணற்ற துறைகளைப் பற்றிய அறிவுக் குவியலும் இன்றைய நிலையில் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. எனவேதான், ஆங்கிலப் பயிற்சி, நம் மக்கள் அனைவருக்கும் அவசியம் என்று கருதுகிறேன்

அழகப்பா குழுவினர், ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஏதோ பொதுப்படையாக இரண்டோர் வார்த்தைகள் தெரிவித்திருக்கின்றனரே தவிர, குறைந்தது இன்ன அளவாவது ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியம் இருக்கவேண்டுமென்று, திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கவில்லை. 'அழகப்பா அறிக்கையின் மிகப் பெரிய தவறு இது,' என்று கருதுகிறேன்.

மிக முக்கியமான மற்றோர் பிரச்சினையையும் அழகப்பா குழு கவனிக்கத் தவறிவிட்டது. கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு இருத்தலாகாது' என்பதே அது. இது ஜனநாயக சகாப்தம். இந்தக் காலத்தில் ஒரே கட்சி என்றென்றும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் என்று சொல்ல முடியாது. ஒவ்வோர் கட்சிக்கும் ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை இருக்கக்கூடும். கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு மிக அதிகமாக இருக்குமானால், ஒவ்வோர் கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறபோதும், ஒவ்வோர் வகையான கல்விக் கொள்கை நிலைநாட்டப்பட்டு, கல்வி உலகம் குழப்பத்திற்கும், நிலையற்ற தன்மைக்குமே ஆளாகிவிடும். கல்வித் துறையில் எத்தகைய மாறுதல் செய்யப்படுவதானாலும், அது, அடிக்கடி மாறக்கூடிய மந்திரி சபைகளால் செய்யப்படுவதைவிட, கல்வித் துறையில் சிறந்த பயிற்சி வாய்ந்த வல்லுநர்களால் செய்யப்படுவதே மிகவும் நல்லதாகும்."

பம்பாய்: ஒரு 'தங்குமிடம்'

பம்பாய் நகர் பல நாட்டவரின் 'தங்குமிடம்' என்று என். வி. காட்கில் எம். பி. வர்ணித்திருக்கிறார்.

"பல இடங்களிலிருந்தும் வரும் பல வகுப்பு மக்கள், பம்பாய் நகருக்கு பணம் ஈட்டவருகின்றனர்; ஆனால், பம்பாய் நகருக்கென தனிக் கலாச்சாரம் எதும் இல்லை; எனவே, அதற்கு சொந்த இதயம் இல்லை. மராட்டியத்தின் இதயம் பம்பாய்தான்; ஆகவே, பம்பாய் மராட்டியத்தின் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்பது இயற்கையான ஒன்றாகும். பம்பாய் இல்லாவிடின், மராட்டியத்தின் சமூக, கலாச்சார வாழ்க்கை பூர்த்தியாகாது,"

என்றும் அவர், மராட்டிய பிரதேச காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மராட்டிய காங்கிரசின் கொள்கை, காங்கிரசின் கொள்கைக்கு விரோதமானதல்ல; மராட்டியரும் வேறு எவரையும் விட காங்கிரசாரராயும், தேசீய வாதிகளாயிருப்பதிலும் குறைந்தவர்களல்ல" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆணையாம்பட்டிக்கு அண்ணா வருகை

23—11—55 மாலை 6 மணிக்கு தோழர் சி.என். அண்ணாதுரை அவர்களுக்கு ஆணையாம்பட்டி பஞ்சாயத்து போர்டு வரவேற்பு அளிக்கும்.

அன்று இரவு 7 மணிக்கு, ஆணையாம்பட்டி தி. மு. கழக 4-வது ஆண்டு விழாவும், அழகிரி படத் திறப்பு விழாவும் தோழர் ஆர். மாரிமுத்து தலைமையில் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார். அதுபோது, மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

‘உதவி பெறும் துவக்கப் பள்ளிகளின் நெருக்கடி’

‘அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும்’

19—11—55 அன்று வேலூரில், வி. இலட்சுமணசாமி முதலியார் நகர மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில எய்டட் ஆரம்பப் பள்ளி மானேஜர்கள்—ஆசிரிய மானேஜர்கள் சங்க இரண்டாவது மாநாட்டின்போது, வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். இராமானுஜையா, தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது :—

“எய்டெட் ஆரம்பப் பள்ளி மானேஜர்களாகிய நமக்கு, இது மிகவும் நெருக்கடியான ஒரு நேரம்; நம்முடைய பள்ளிக்கூடங்களுக்கு நல்லதோர் எதிர்காலம் உண்டா இல்லையா என்பதே சந்தேகத்திற்குரிய ஒரு பிரச்சினையாகிவிட்ட வேளை; அரசாங்கத்தார் திடீர் திடீரென்று பிறப்பித்துவருகிற உத்தரவுகளால், நாம் நம்முடைய பள்ளிக்கூடங்களை ஒழுங்கான முறையில் நடத்த முடியாமல் தத்தளிக்கிற சமயம்; இப்படிப்பட்ட நெருக்கடியான ஒரு சமயத்தில் நாம் உறங்கிக்கிடப்போமானால், நமக்கும், நம் பள்ளிக்கூடங்களுக்கும், இந்த மாநிலத்தின் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கும் சிறப்பும், செழிப்பும் மிக்கதோர் எதிர்காலம் இல்லாமற் போய்விடும்.

நஷ்ட ஈடு எங்கே?

“19—5—55-ல், சென்னை அரசாங்கத்தார் ஓர் உத்தரவைப் பிறப்பித்தார்கள். அந்த உத்தரவில், ‘ஆண்டுக்கு ரூ. 1,200-க்குக் குறைவான வருமானமுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளிடமிருந்து 1 முதல் 8-வது வகுப்புவரையில் இனி கட்டணம் வசூலிக்கப்படக் கூடாது’ என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி, ஆரம்பப் பள்ளிகளிலும் சரி, இந்த உத்தரவு ஜூன் திங்கள் முதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் அந்த உத்தரவில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்படி இலவசமாகக் கல்வியை அளிப்பதன் விளைவாகப் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் ஈடுகட்டித் தருவார்கள் என்றும் அந்த உத்தரவில் தெள்ளத் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.

“ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர்—என்று மாதங்கள் ஒவ்வொன்றாக உருண்டோடியபடி இருக்கின்றன; என்றாலும், இதுவரையில் அரசாங்கத்தார் அளிப்பதாக உறுதி கூறிய நஷ்ட ஈடு நமக்கு வந்துசேரவில்லை. அப்படி வந்து சேராததால், அந்தந்த மாதம் செய்துதீர வேண்டிய செலவுகளுக்குப் பணம் கிடைக்காமல் நாம் திண்டாடித் தவித்துத் தத்தளிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

“தரப்பட வேண்டிய நஷ்ட ஈட்டை இன்னமும் தராமலிருக்கிறார்களே அரசாங்கத்தார்—பணத்திற்கு என்ன செய்வது—செலவுகளை எப்படிச் செய்வது—பள்ளிக்கூடத்தை எவ்வாறு நடத்துவது என்றெல்லாம் நாம் வேதனைக்கு உள்ளாகிக் கைகளைப் பிசைந்து கொண்டிருந்த நேரத்தில், அரசாங்கத்தார் 14—9—55 அன்று, மற்றுமோர் உத்தரவைத் திடீரென்று பிறப்பிக்கலானார்கள்.

“நஷ்டம் முழுவதும் ஈடுகட்டித் தரப்படும் என்று முன்னே கொடுத்த உறுதி மொழியை முற்றிலும் புறக்கணித்துவிட்டு, அரசாங்கத்தார் அறிவித்துள்ள புதிய விகிதங்கள், நாம் வசூலித்துவருகிற கட்டண விகிதங்களில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லை. இந்த விகிதங்களின்படி நஷ்ட ஈடு தரப்படுமானால், நாம் நம்முடைய பள்ளிக்கூடங்களை மூடுவதைத் தவிர வேறு வழி கிடையாது. இவ்வளவு குறைவான நஷ்ட ஈட்டுத் தொகையைக்கொண்டு பள்ளிக்கூடத்திற்குத் தேவையான எல்லாச் செலவுகளையும் நிறைவேற்றுவது என்பது ஒருக்காலும் இயலாத செயல்.

அழகப்பா குழு அறிக்கை

“அரசாங்கத்தாரின் உத்தரவுதான் இத்துணை விபரீதமாக இருக்கிறதென்றால், டாக்டர் அழகப்ப செட்டியாரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆரம்பக் கல்வி ஆராய்ச்சிக் குழு, இதைவிட ஒருபடி மேலே சென்று, இதனினும் மோசமான ஓர் சிபாரிசைச் செய்திருக்கிறது.

“அரசாங்கத்தார், ஒவ்வோர் ஆரம்பப் பள்ளிக்கும், அடுத்த ஆண்டிலிருந்து எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலித்தல் கூடாது என்று, ஓராண்டுக் கால ‘நோட்டீஸ்’ கொடுக்க வேண்டுமாம். அந்த ஓராண்டுக் காலத் தவணை முடிந்ததும், எந்தப் பள்ளிக்கூடமும் எந்த மாணவனிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கக் கூடாதாம். எந்தப் பள்ளிக்கூடமும் அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈடும் கேட்கக் கூடாதாம். இது அழகப்பா குழுவின் அதி அற்புதமான ஓர் ஆலோசனை.

இவ்வளவு அற்புதமான ஓர் யோசனையை இந்தக் குழுவினர் எப்படித்தான் கண்டு பிடித்தார்களோ நமக்குத் தெரியவில்லை.

சம்பளமும் வாங்காதே—நஷ்ட ஈடும் கிடையாது என்று சொல்லி விட்டால் பள்ளிக்கூடம் எப்படி நடக்கும்?

ஒருவேளை, இப்படியெல்லாம் பள்ளிக்கூட நிர்வாகிகளை சங்கடத்திற்கு உள்ளாக்கி, அதன் மூலம் எயிடட் பள்ளிக்கூடங்களை மூடும்படி செய்வதுதான் அழகப்பா குழுவின் நோக்கமோ என்றுகூட நாம் ஐயப்படுகிறோம்.

அழகப்பா குழுவிற்கோ, அல்லது அரசாங்கத்திற்கோ அப்படிப்பட்ட உள்நோக்கம் ஏதாவது இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்லிவிடட்டும்.

‘எயிடட் பள்ளிகள் இந்த மாகாணத்தில் இருக்கவேண்டுமா வேண்டாமா?’

இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தெளிவான ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்.

எயிடட் பள்ளிகள் இருக்கத்தான் வேண்டும் — அவற்றால் சிறந்த பலன் இருக்கத்தான் செய்கிறது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், அதனைத் தெளிவாக அறிவித்துவிடட்டும்.

ஒரு வேளை, எயிடட் பள்ளிகள் தேவையே இல்லை — அவற்றால் பயன் எதுவுமே இல்லை என்பது அரசாங்கத்தின் எண்ணமாக இருந்தால், அதனையும் அழுத்தந் திருத்தமாக அறிவித்துவிடட்டும்.

எயிடட் பள்ளிகளும் இருக்கத்தான் வேண்டும்; அவற்றில் சம்பளமும் வசூலிக்கக்கூடாது என்பது அரசியலாரின் எண்ணமாக இருந்தால் போதுமான நஷ்டஈட்டைத் தந்தே ஆகவேண்டும்.

இல்லை—எயிடட் பள்ளிகளே தேவையில்லை என்பது அரசாங்கத்தின் கருத்தானால் — அந்தக் கருத்தை அறிவிப்பதற்கு முன்னால், அப்படிப்பட்ட முடிவுக்கு வருவதின் மூலமாக அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டம் எவ்வளவு என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்துகொள்ளட்டும்.

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி, சிறப்பான முறையிலும், பாராட்டத்தக்க வகையிலும் இருக்க வேண்டுமானால் அரசாங்கத்தார் கீழ்க்கண்ட திட்டங்களை உடனே நிறைவேற்றியாக வேண்டும் :—

1. எல்லா எயிடெட் பள்ளிகளுக்கும் 1954-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட கட்டண விகிதங்களின்படி முழு நஷ்ட ஈடு அளிக்க வேண்டும்.

2. அரசாங்கத்தார் தாமாகவே புதிய பள்ளிக்கூடங்களைத் தொடங்கி நடத்த முடியாத நிலையில் இருப்பதால், எங்கெங்கே எயிடெட் நிர்வாகிகள் புதிய பள்ளிகளைத் தொடங்க முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் அவர்களுக்கு அரசாங்கம் ஆக்கமும், ஊக்கமும், பொருளுதவியும் அளிக்கவேண்டும்.

3. எயிடெட் பள்ளிகளுக்கு நிர்வாகக் கமிட்டி அமைப்பது என்கிற அழகப்பா குழுவின் யோசனையை, அதனால் குழப்பமும் பிணக்கும் அரசியல் பூசலும் மட்டுமே உருவாகும் என்கிற காரணத்தால், அடியோடு ஒதுக்கித்தள்ள வேண்டும்.

4. வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்துவது என்னும் சிபாரிசை நிராகரித்துவிட்டு, 1938 வரை சிறப்புடன் பணியாற்றி வந்த கல்வி மன்றங்களை மீண்டும் நிலைநாட்ட வேண்டும்.

5. ஆரம்பப் பள்ளிகளிற் பயிலும் எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் பகல் உணவு, புத்தகம், பலகை, எழுதுகோல், குறிப்புச் சுவடிகள் ஆகியவை அரசாங்கத்தால் இலவசமாக அளிக்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான பணத்தை அரசாங்கம் எப்படியாவது திரட்டியே ஆகவேண்டும். மத்திய அரசாங்கத்திடமிருந்து இதற்கான தொகையைச் சென்னை அரசாங்கம் கேட்டுப் பெறுவது மிகவும் நல்லது.

6. 4-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாய பாடமாகப் புகட்டப்பட வேண்டும்.

7. ஆதாரக் கல்வி என்பதற்கு இதுதான் பொருள் என்று இதுவரை யாராலும் விளக்க முடியாததாலும், அந்தக் கல்வியால் உருப்படியான பலன் இருக்கிறது என்று கூறுவதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லாததாலும், ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு, அந்த முயற்சியில் செலவிடப்படும் தொகை முழுவதையும், புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதில் ஈடுபடுத்த வேண்டும்.

8. ஆரம்பப் பள்ளிகளில், பல்வேறு மதத்துப் பிள்ளைகளும் படிப்பதால் மதக் கல்விக்கு இடமிருக்கக்கூடாது; ஆனால் ஒழுக்கக் கல்வி இப்போது இருப்பதைப் போலவே, தொடர்ந்து இருக்க வேண்டும்.

9. சின்னஞ் சிறு பிள்ளைகளுக்குப் பெரியதோர் பாரமாக அமைந்திருக்கும் ஈ. எஸ். எல். சி. பரீட்சையை உடனடியாக அகற்றிவிட வேண்டும். ஒருக்கால் அந்தப் பரீட்சை இருந்தே தீரவேண்டுமென்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தால், உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டும் என்று இல்லாமல் உயர்நிலைப் பள்ளிகளில் பயில்கிற பிள்ளைகளுக்கும் அந்தப் பரீட்சை ஏற்படுத்தப்படவேண்டும்.

10. உயர்தர ஆரம்பப் பள்ளிகளின் 6, 7, 8 வகுப்புகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளின் 1, 2, 3-வது படிவங்களுக்குமிடையே இப்போதுள்ள எல்லா வேறுபாடுகளும் ஒழிக்கப்பட்டு, இரண்டும் ஒன்றே என்கிற நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

மாணவர்களின் அரசியல் ஈடுபாடு

கழக நிலை குறித்து பொதுச்செயலாளர் விளக்கம்

“எதிர்காலத்தில், நாட்டுக்கு நல்ல பல பணிகளை ஆற்ற வேண்டிய பொறுப்பு மாணவரிடம்—அந்த அறிவுப்படையினரிடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதுதான், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை அமைக்கக் காரணமாக இருக்கிறது.

“எதிர்கால நாட்டில், நல்ல பல திட்டங்களை உருவாக்கித் தர—தாங்கள் பள்ளிகளில் பயின்றகாலைப் படித்த புள்ளிவிவரங்களை நமக்கு எடுத்துக்காட்டி—இந்த நாட்டுடன் மாற்று நாடுகளையும் ஒப்பிட்டு, இந்நாட்டில் செய்ய வேண்டியவை இன்னின்ன என்பதை எடுத்துக்கூறவும், அவர்கள், தங்கள் கல்வி நேரம் போக ஓய்வு நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி, அரசியல்—பொருளாதார—சமுதாயத் துறை விவரங்களை எடுத்துக்கூற வேண்டிய பெரும் பொறுப்பும் மாணவர்களுக்கே உரியது என்பதால்தான், நாம் ஆங்காங்கே திராவிட மாணவ முன்னேற்றக் கழகங்களை நிறுவுகிறோம்—அவற்றைக் கட்டிக் காத்து வளர்க்கப் பாடுபடுகிறோம்,”

—என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 19-11-55ல் சென்னையில் நடைபெற்ற தி. மா. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டார். (அவரது சொற்பொழிவின் முற்பகுதி சென்ற இதழில் வெளிவந்துள்ளது.)

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளலாமா—கூடாதா? மாணவர்களுக்கும் அரசியலுக்குமுள்ள தொடர்பு என்ன?—என்பது பற்றிப் பல்வேறு அரசியல் தலைவர்களும் தங்கள் தங்கள் கருத்தைக் கூறுகிறார்கள்.

“‘மாணவர்கள் அறவே அரசியலில் ஈடுபடக்கூடாது; அரசியல் விவகாரங்களில் தலையிடக் கூடாது; ஏனெனில், அவர்கள் அரசியல் துறையில் ஈடுபட்டால், அவர்களது கவனம் முழுவதும் தங்கள் கல்வியின்பால் செல்லாமல் வேறுபக்கம் திரும்பிவிடும்; கல்வியின் பெருமை குறையும்’ என்கின்றனர் ஒரு சாரார்; மற்றொரு சாரார், ‘மாணவர்கள் முழுக்க முழுக்க அரசியலிலே பங்கு பெற வேண்டும்; அப்படி அவர்கள் அரசியலில் முழுவதுமாக ஈடுபட்டால்தான் நாட்டுக்குத் தேவையான நல்லன எவற்றையும் துணிந்து தீவிரமாகச் செய்ய முடியும்’ என்றும் கூறிவருகின்றனர். மற்றும் சிலரோ, ‘மாணவர்கள் தாங்கள் கல்வி பயிலும் காலத்தில், அரசியலைப் பற்றி—அரசியல் நடவடிக்கைகள் பற்றி நன்றாக அறிந்திருக்க வேண்டும்; ஆனால், அரசியல் நடவடிக்கைகளில் நேரடியாகக் கலந்துகொள்ளக் கூடாது — ஈடுபடக்கூடாது’ என்கின்றனர்.

“திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாமும், இந்த மூன்றாவது ரகத்தைச் சார்ந்தவர்களாகத்தான் — ‘அரசியலை அறிய வேண்டும்; ஆனால், தொடர்பு கொள்ளக்கூடாது’ என்று கூறுபவர்களைச் சார்ந்தவர்களாகத்தான் இருக்கிறோம்.

“பள்ளிக் காலம் முடியும்வரை ஆசிரியர்கள் சொல்லித்தந்ததை மட்டுமே தெரிந்துகொண்டு, தங்கள் பள்ளிப் படிப்பு முடிந்தபின்னரே—பொது வாழ்வில் ஈடுபடும் போதுதான், அரசியல் அரிச்சுவட்டைத் திருப்புவது என்ற நிலை ஏற்பட்டால், அந்நிலையிலுள்ளவர்கள் எந்தக் காலத்தில்தான் அரசியல் முழு அறிவையும் பெற முடியும்? எனவே, ஒருவன் தனது கல்விக் காலத்திலேயே அரசியலை அறிந்திருந்தால்தான் — தான் வாழும் நாட்டிலுள்ள சுற்றுப்புறச்சூழ்நிலை எல்லாம் தெரிந்துகொண்டால்தான், அவன், வளர்ந்துள்ள அரசியலுடன் தன்னையும் வளர்த்து, நாட்டுக்குத் தேவையானவை இன்னின்ன என்று கண்டறிந்து, அதன் வழிநின்று பணியாற்றத் தன்னைத் தயார் செய்துகொள்ள முடியும்.

“‘அரசியலில் மாணவர்கள் ஈடுபட்டால், அவர்கள் பாழ்பட்டுவிடுவார்கள்’ என்று கூறுகிறார்கள். பள்ளிகளில் மட்டுமென்ன—அரசியல் பாடங்கள் இல்லையா? பள்ளிகளில் மட்டும், நெப்போலியனைப் பற்றியும், பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணம் பற்றியும், ரஷ்யப் புரட்சிக்கான அடிப்படை பற்றியும் தெரிவிக்கின்ற கடந்த கால அரசியல் உண்மைகளைக் கற்றுக்கொள்ளலாமாம்—அந்த சரித்திரங்களைப் படிப்பதின் மூலம், அரசியல் இராஜதந்திரங்களும், சூழ்ச்சிகளும் என்ன என்பது பற்றித் தெரிந்துகொள்ளலாமாம்!—ஆனால், நிகழ்கால அரசியலைப் பற்றி மட்டும் தெரிந்துகொள்ளக் கூடாதாம்!

“காங்கிரஸ்காரர்கள் மட்டும் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நுழைந்து அரசியல் பற்றிப் பேசலாமாம்—நாம் மட்டும் அங்கெல்லாம் போய்ப் பேசக் கூடாதாம்.

“மாணவர்கள் சேர வேண்டிய அரசியல் கட்சி, நாட்டுப் பிரிவினை ஆகியவற்றையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் மாணவரிடை கூறலாமாம்; ஆனால், நாம் அதுபற்றிப் பேசக்கூடாதாம். எனவேதான் பள்ளிகளில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்காத—கொடுக்க மறக்கப்படுகிற அரசியல் துறை அறிவுப் பாடங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் இங்கு சொல்லுகிறோம்.

“வரும் காலத்தில் உள்ள பொறுப்பு மிகுந்த பணிகளில் எல்லாம், இந்தத் தலைமுறை மாணவர்கள்தான் வர இருக்கிறார்கள்; அவர்களில் பெரும்பான்மையினரெல்லாம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தவராக இருந்தால்....!

“நாட்டிலுள்ள துறைகள் அனைத்திலும் நமது இயக்க மாணவர்களே நிர்வகிக்கும் பொறுப்பில் வந்தால்...?—எவ்வளவு காலம் ஆகும் நமது இலட்சியத்தை அடைய?

“எனவேதான், எதையும் சாதிக்கின்ற துணிவு கொண்ட ஆற்றல் படையினரை—அறிவுப் படையினரை நாம் ஒன்று திரட்டும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்—அந்த வேலையிலே ஓரளவு நல்ல வெற்றியும் கண்டிருக்கிறோம்—கண்டு வருகிறோம். கொள்கையைப் பரப்பும் ஆர்வமிக்க மாணவத் தோழர்கள் ஆங்காங்கே சிதறப்பட்டிருந்தாலும் கட்டுப்பாட்டுடன், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தை அமைத்து, அதனை அன்புடனும் ஆதரவுடனும் அரவணைக்கிறது.”

மதியழகன் அறிவிப்பு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

"நமது பணிகளுக்கு அண்ணா அவர்கள் ஆற்றல் கோட்டையாக விளங்குகிறார்; நாமோ, அவரைவிட ஓர்வகையில் பாக்கியசாலிகள். அண்ணா அவர்களைவிட, எந்த அம்சத்தில் நாம் சிறந்தவர்கள்—என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; ஒன்றே ஒன்றுதான் அகப்பட்டது; அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்—'நான் பெரியாரின் சீடன்,' என்று! அவர், பெரியாரின் சீடர்; நாமோ, அண்ணாவின் சீடர்கள்; இந்த இடம்தான், அண்ணாவே நம்மிடம் போட்டி போட முடியாத ஓர் இடம். அத்தகைய வாய்ப்பும், ஆற்றலும் பெற்ற நீங்கள், நமது இலட்சியத்தை வெற்றிபுரிக்கு அழைத்துச் செல்ல நிச்சயமாய் இயலும்.

"இவனென்ன சித்தார்த்தன் — புத்தனாகிறானே—என்று கருதுகிறீர்கள். நானொன்றும் சித்தார்த்தனுமல்ல—நாமிருப்பது கபிலவாஸ்து அரண்மனையுமல்ல; நாம் ஈடுபட்டிருக்கும் இலட்சியத்திற்கு இன்னும் உற்சாகமாய் பங்குகொள்வேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

"எனவே, மாணவர் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகுகிறேன்; என்னை அன்புகூர்ந்து அனுமதித்து, அதன் பொறுப்புகளை ஏற்று நடத்த இந்த மாநாட்டில் நீங்கள் தீர்மானிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியிலும், பணியிலும் என்னாலான எல்லா தொண்டுகளையும் எப்போதும்போல செய்து வருவேன் என உறுதிகூறி, கட்டுக்கோப்பும், கவர்ச்சியும், வலிவும், பொலிவுமுள்ள அமைப்பாக மாணவர் கழகத்தை மாற்ற நீங்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாணவர் கழகப் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகுகிறேன்."

—இவ்வாறு, சென்ற 19-11-55ல், சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

மேலும், அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அண்மையில் கடந்த 2, 3 திங்களுக்கு முன்னர் எல்லாம், நாடு முழுவதும் சென்று பார்த்தாலும் மிருகங்கள் மாநாடுகளாகத்தான் காணப்பட்டன. மிருகங்கள் மாநாடு என்றால், அண்மையில் சென்னையில் நடைபெற்ற மிருகக் காட்சிச்சாலை நூற்றாண்டு விழாவைக் குறிப்பிடவில்லை; எந்த இடத்தில் சென்று பார்த்தாலும் மாட்டுக்கு ஓட்டுப் போடுங்கள்—சிங்கத்திற்கு ஓட்டுப்போடுங்கள்—ஒட்டகத்திற்கு ஓட்டுப் போடுங்கள்—என்று மிருகங்களை முன்நிறுத்தி மாநாடு கூட்டுவது போலத்தான் இருந்தது; இவற்றையெல்லாம் பார்த்து, ஒருவேளை இந்த நாட்டில் மிருகங்களின் ஆட்சிகூட வந்துவிடலாமென்றுகூட ஐயுறவேண்டியதாகிவிட்டது. இந்த நாட்டை ஆளும் சர்க்காரும் மிருகங்களைப் பேணி வளர்ப்பதில் அக்கரை செலுத்துவது போலத்தான் அண்மையில் பண்டித நேரு, சௌராஷ்டிரத்திலுள்ள காடு ஒன்றுக்குச் சென்றிருந்தபோது, தம்முடன் சிங்கமொன்று சிநேகமாகிக் கொண்டதால், அதனை வேட்டையாடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"உண்மையிலேயே இன்று நேரு பண்டிதருக்கிருக்கிற கவலையெல்லாம், பாட்னாவிலுள்ள மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்படுவது அல்ல—மிருகங்கள் கொல்லப்படக் கூடாது என்பதுதான்.

"நம் முதலமைச்சர் காமராசரும் கூடத்தான், 'மாடு மாடு' என்று கத்திக்கொண்டிருந்தார். அவர் 'மாடு மாடு' என்று சொல்லிக் கொண்டிருந்த நேரத்தில் 'நாடு நாடு' என்று சொன்ன மகத்தான விடுதலைப் பட்டாளத்தினராகிய நாம் இப்போது இங்கு கூடியிருக்கிறோம்.

"வடநாட்டினரால் நாம் தாக்கப்பட்டுக் கிடக்கிறோம்; இந்திமொழி ஏகாதிபத்தியப் பிடிப்பில் சிக்குண்டு கிடக்கிறோம். தற்போது இந்தியா வந்துள்ள சோவியத் பிரதமர் புல்கானினுக்கு வாசித்தளிக்கும் வரவேற்பு இதழ்கள் எல்லாம் இந்தி மொழியிலோ, ரஷ்ய மொழியிலோதான் இருக்க வேண்டுமென்று கட்டளை பிறப்பித்திருக்கிற பரிதாப நிலையில் நாம் இன்று இருக்கிறோம்.

"நம்முடைய நலன்களையெல்லாம் வடநாட்டவர் புறக்கணித்து விட்டனர். நம்முடைய தலைவர்களோ கைபொம்மைகளாகக்காட்சி தருகின்றனர். டில்லியிடம் சென்று கைகட்டி வாய்பொத்திக் கும்பிட்டு வருபவர்களாகத்தான் இருக்கின்றனர். நமது முதல் அமைச்சர் காமராசரோ 'தமிழ் நாடு' என்ற பெயர் ஏன் இருக்க வேண்டும்? 'சென்னை' என்றே ஏன் இருக்கக் கூடாது?—என்று கேட்கிறார்—தமிழ் மொழில் ஒரு சிறிதளவு கூட ஆர்வம் இல்லாதவராக!

"நம்மீது இந்தி மொழியைப் புகுத்தவில்லை என்று கூறுகின்றனர் ஓர் புறம்; ஆனால், மற்றோர் புறமோ, அதனை வலுக்கட்டாயமாகத் திணித்து வருவதையும் நாம் காண்கிறோம். இப்படி இருந்தால் நம் தாய்மொழி—தமிழ் மொழியின் நிலை என்ன என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். நம்முடைய அமைச்சர்கள் கூறுகிறார்கள்—நேரு நல்லெண்ணம் கொண்டவர்; அவர் எதையும் நமக்கு விட்டுக்கொடுப்பார் என்றெல்லாம்! உண்மையிலேயே நேரு பண்டிதரால் தமிழரின் நலன் பாதுகாக்கப்படுமா என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஆசியாவின் பெருமையைப் பாரீர்—அகில உலகப் புகழ் ஆசிய ஜோதி நேரு பண்டிதரைப் பாரீர்—முப்பத்து மூன்று கோடி மக்களின் தனிப்பெருந் தலைவரைப் பாரீர்—8 ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் அவருக்குக் கிடைத்துள்ள அந்தஸ்தைப் பாரீர்—என்று புல்கானினிடம் கூறி, புகழ் சம்பாதிக்க அவர்கள்—டில்லி ஏகாதிபத்தியம் மேற்கொண்டுள்ள சதித் திட்டங்களையெல்லாம் மாணவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"எனவேதான், நாம் 'நம்முடைய நாட்டை—நம்மை நாமே ஆள முழு அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்; அந்த அதிகாரம் பெறாதில்லாத வரையில் நாம் அடிமைகளாகத்தான் இருப்போம்—கீழானவர்களாகவேதான் கருதப்படுவோம்; பிற நாடுகளைப் போல் சுடர்விட்டுப் பிரகாசிக்க முடியாது,' என்று கூறிவருகிறோம்.

"நம்முடையபெருமைமிக்க பண்டையப் பெரும் பரம்பரையினர் வழிவந்த நம்மிடையே இன்று இருந்துவருகிற இழிநிலை துடைக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. அந்த இயக்கத்தின் கொள்கைகளை நல்லமுறையிலே நாடறியச் செய்யும் பணியில் ஈடுபட வேண்டுமென்பதற்காக திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தையும் கட்டிக்காத்து வருகிறது."

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

22—11—55 மம்சாபுரம்
23—11—55 கடையநல்லூர்

'வீர வாலி'—நாடகம்

22-11-55 இரவு 10 மணிக்கு, நாமக்கல் ஸ்டார் டாக்கீசில், தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக, தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில், தோழர் ப. கண்ணன் எழுதிய 'வீர வாலி' நாடகம் இடைப்பாடி வள்ளுவர் கலா மன்றத்தினரால் நடத்தப்படும்.

'காதல்ஜோதி'-நாடகம்

23-11-55 இரவு 10 மணிக்கு, ஆத்தூர் மெஹர் தியேட்டரில், பெத்தநாய்க்கன்பாளையம் தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக தோழர் கே. ஆர். ராமசாமி நடிக்கும் 'காதல் ஜோதி'—நாடகம், தோழர் சி. என். அண்ணாதுரை தலைமையில் நடைபெறும்.

கடலூர் ஓ. டி. 2-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

23—11—55 இரவு 7-30 மணிக்கு, கடலூர் ஓ டி. 2-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழகப் பணி மனையில் நடைபெறும்.

பொதுக்கூட்டம்

22—11—55 மாலை 5 மணிக்கு, மேலக்காட்டூரில், தோழர் நீ துரைராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பொ தருமன், ம. கோ. மணி, மோகன், என். அசோகன், மு ச மீனாதன், எம். வேலன் ஆகியோர் பேசுவர்

சுல்தான் அரண்மனை முன்பு இரணகளம்!

மொராக்கோவில் பயங்கரக் கொலை

ரபாத் (பிரெ. மொராக்கோ) நவ. 20—

இரண்டாண்டுகளுக்கு முன்னர், மொராக்கோ சுல்தானாக இருந்தபோது, அவரை தான் கவிழ்க்கச் செய்த சதித் திட்டங்களுக்காகத் தன்னை மன்னித்து விடும்படி கேட்டுக் கொள்வதற்காக, இப்போது மீண்டும் சுல்தானாக வந்துள்ள மொராக்கோ சுல்தான் அரண்மனைக்குச் சென்று விட்டுத் திரும்பிய பெஸ்காலிப் என்பாரையும், அவருடன் சென்ற மற்றும் அறுவரையும் மொராக்கோ வாசிகள், அவர்களை மொராக்கோ சுல்தானின் விரோதிகள் என நினைந்து ஆவேசமாகத் தாக்கிக் கொலை செய்திருக்கின்றனர்.

அரண்மனை முன்பு நடைபெற்ற இந்தக் கொலையின் விளைவாக, அந்த இடம் ஒரே இரணக்களமாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறதாம். கொல்லப்பட்ட அறுவருள் ஒருவர் உயிருடனே நெருப்பிடப்பட்டுப் பொசுக்கப்பட்டார் என்றும், மற்றொருவர் தலை கத்தியால் சீவப்பட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கொலை செய்தியைக் கேள்வியுற்ற மொராக்கோ சுல்தான் வெளிவந்து, அங்கு ஆவேசத்துடனும், ஆத்திரத்துடனும் கூடி நின்ற 10,000-த்திற்கும் மேற்பட்ட மொராக்கோ மக்களைக் கலைந்து செல்லும்படி கேட்டுக் கொண்ட பின்னரும், அவர்களைப் போலீசாரே கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

நேற்றுத்தான் மொராக்கோவிலுள்ள முக்கியமான இரண்டு தேசிய இயக்கங்களிடையே மோதுதல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மோதுதல்களின் விளைவாக இருதரப்பினரிலும் பலருக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சுல்தான் நலனுக்காக என்று கூறி கொலை செய்தவர்கள் சிலரைப் போலீசார் கைது செய்து, அவர்கள் கைகளைப் பிணைத்து, சுல்தான் முன்னர் விசாரணை செய்யப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனராம்.

இதனிடையில், தாக்கப்பட்ட பெஸ்காலிப் உட்பட்ட எழுவரும் தங்கள் ஆடைகளுக்குள், கைத்துப்பாக்கிகளை ஒளித்துவைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

☆

22—11—55 காலை 9 மணி: செல்லப்பம்பட்டி — பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
காலை 10 மணி: நாமக்கல் வட்ட தி. மு. கழக ஊழியர் கூட்டம்;
மாலை 4 மணி: காவேட்டிபட்டி பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
மாலை 4-30 மணி: சந்தம்பாளையம் தி.மு.க. வரவேற்பு;
மாலை 5 மணி: பாண்டமங்கலம்—பொதுக்கூட்டம்;
இரவு 7 மணி: நாமக்கல்—பொதுக்கூட்டம்;
இரவு 10 மணி: 'வீர வாலி' நாடகத் தலைமை
23—11—55 காலை 10½ மணி: நீர்முள்ளிக்குட்டை - பொதுக் கூட்டம்;
மாலை 4 மணி: மல்லியகரை —பொதுக்கூட்டம்;
மாலை 6 மணி: ஆனையாம் பட்டி—பஞ்சாயத்து போர்டு வரவேற்பு;
இரவு 7 மணி: ஆனையாம் பட்டி பொதுக்கூட்டம்;
இரவு 11 மணி: ஆத்தூர்—நாடகத் தலைமை.

அண்ணாதுரை நீர்முள்ளிக்குட்டை

வருகை

23—11—55 காலை 10-30 மணிக்கு, கந்தசாமி கோவில் தெருவில், தி. மு. கழக விவசாயிகள் ஆண்டு விழா, தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும், தோழர் சி. என். அண்ணாதுரை, மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். அதுபோது, ஊராட்சி மன்றத்தாரால் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும்.

பெல்லாரி சிக்கல் போராட்டம்

மொத்தம் 165 பேர் கைது!

பெல்லாரி, நவ. 20—

வாய்க்கால் நீர் விதிகளை மீறியதாக மோககே கிராமத்திற்கு அருகில், 'அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்'தைச் சேர்ந்த 46 பேர் கொண்ட சத்தியாக்கிரகத் தொண்டர் குழு ஒன்றை இன்று போலீசார் கைது செய்தனராம்; இதையொட்டி இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 165 ஆகும்.

தி. மா. மு. கழக
அமைப்புக் குழு.........

(1–ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இம்மாநாடு அதிகாரமளிக்கிறது.

c. கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சகலரையும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் இல்லாத இடங்களில் புதிதாக நிறுவவும், நிறுவிய கழகங்களை தலைமை நிலையத்துடன் பதிவு செய்து கொள்ளவும் இந்த மாநாடு வேண்டிக்கொள்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

பொதுக் குழு உறுப்பினர் கவனிக்க

மாநில மாநாட்டின் வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணமாகிய ரூ. 10-ஐ இதுவரையில் செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர்கள் உடனடியாகச் செலுத்தும்படி மிக்க வருத்தத்தோடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கடமையைச் செய்ய மறந்திருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அவர்தம் கடமையை நிறைவேற்றி வைக்கும் வகையில் தக்க செயல்களை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் செலுத்தாத பொதுக் குழு உறுப்பினர், பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாமலிருக்கக்கூடும்.

'அறிவகம்.'
18-11-'55

—தி.மு.க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

கடையநல்லூர் வருகை

23-11-55 இரவு 7 மணிக்கு, கடையநல்லூர் மறுமலர்ச்சி திடலில், மறுமலர்ச்சி மன்றச் சார்பில், தோழர் பி. ஆறுமுகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ப. புகழேந்தி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.